# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1377/2022 P.W.7

| பெயர்: | : | மணிகண்டன் | த-பெ | தண்டபாணி |
|---|---|---|---|---|
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.08.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07.08.2019 அன்று காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிட மாலை 6.00 மணியளவில் வந்தபோது போலீசார் அங்கு வந்து பேருந்துகள் வெளியே வரும் இடத்தில் நின்று கொண்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணம் விபத்து வழக்கு குறித்து தயார் செய்யப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால் வரைபடம் மட்டும் வரைந்திருந்தார்கள். எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் நடந்த விபத்து குறித்து கையொப்பம் செய்தேன். போலீசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்றால் மாலை 6.00 மணிக்கு. எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம்

செய்தேன். சம்பவ இடத்தின் நான்கு மால் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கையொப்பம் செய்ய கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. கையொப்பமானது காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் வைத்து செய்தேன். மேற்படி கையொப்பமானது காவல் நிலையத்தில் வைத்து செய்துவிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.24 12:19:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1377/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | இளையராஜா | த-பெ | வெள்ளைசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | எலெக்ட்ரிசன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.08.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து எலெக்ட்ரிசனாக வேலை செய்து வருகிறேன். தேதி நினைவில் இல்லை . 7 வது மாதம் 2019 அன்று ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது எனது நண்பர் ஒருவர் என்னிடம் போனில் தொடர்பு கொண்டு என்னுடைய மற்றொரு நண்பர் கணேசன் என்பவரின் தாயார் டீ சாப்பிடுவதற்காக காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் சென்று கொண்டிருந்தபோது அரசு பேருந்து ஒன்று அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி நிகழ்விடத்திலேயே அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் மாலை போலீசார் வழக்கு சம்பந்தமாக அன்றைய தினம் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் எனக்கு தெரிந்த விபரங்களை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னிடம் போனில் தகவல் சொன்ன நபரின் பெயர் என்ன என்றால் நியாபகம் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.24 12:19:09 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1377/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துராமன் | த-பெ | கருணாநிதி |
| ஊர்: | : | மருதுபாண்டியர் நகர் | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | எலெக்ட்ரிசன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.08.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மருதுபாண்டியர் நகரில் வசித்து எலெக்ட்ரிசனாக வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பஞ்சவர்ணம் என்பவரை தெரியும். வழக்கின் எதிரியை தெரியாது. கடந்த 16.08.2016 அன்று நான் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். விடியற்காலை 4.00 மணியளவில் அரசு பேருந்து ஒன்று ஒரு பெண்மணி ஒருவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அதை நான் நேரடியாக பார்த்தேன். பின்னர் அவரை சிகிச்சைக்காக வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மூளை கசிவு ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ததாக சொன்னார்கள். மேற்படி விபத்து ஏற்பட்ட பதற்றத்தில் பேருந்தின் ஓட்டுநரை பார்க்க முடியவில்லை. சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபரங்களை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் தேதி தெரியவில்லை. சம்பவம் நடந்த தேதி எப்போது என்றால் 16.08. வருடம் சரியாக நியாபகம் இல்லை. சம்பவத்தின் போது ஓட்டுநரை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. இறந்துபோன நபரின் மகன் கணேசனும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். இறந்துபோன நபர் எனது நண்பனின் தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.24 12:19:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.